பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 30 புதன்கிழமை 14.07.2021 கதிர் 117

## குடும்பஸ்தரின் சடலம் நெடுங்கேணியில் மீட்பு

வவுனியா வடக்கு - நெடுங்கேணி, பட்டுக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவில், இலங்கட்டிக்குளத்துக்கு அருகாமையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

பட்டிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த செல்லத்துரை நவரட்ணம் (வயது - 60) என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

☞2

# மக்களுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடிய திட்டத்தைத் தடுத்து நிறுத்த முடியாது!

## கௌதாரிமுனையில் கடலட்டை குஞ்சு வளர்க்கும் நிலையத்தைப் பார்வையிட்ட பின் டக்ளஸ் கருத்து





**(இ.கலையமுதன்)**

**வெற்றுப் பூச்சாண்டிகளினால் மக்களுக்கு நன்மைகளை ஏற்படுத்தக்கூடிய திட்டங்களைத் தடுத்து நிறுத்த முடியாது என்று தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நியாயமான கருத்துக்கள் இருக்குமாயின் அவை பரிசீலிக்கப்படும் எனவும் கூறினார்.**

☞2

## கொழும்புக்குப் பயணித்த இ.போ.ச. பஸ்கள் ஈரப்பெரியகுளத்தில் திருப்பியனுப்பப்பட்டன

யாழ்ப்பாணத்திலிருந்தும் வவுனியாவிலிருந்தும் கொழும்பு நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான இரண்டு பஸ்கள் ஈரப்பெரியகுளம் சோதனைச் சாவடியுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன. அத்தியாவசிய தேவைகளின்றி பயணித்தவர்களை ஏற்றிச் சென்றதன் காரணமாக இரண்டு பஸ்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை எதிர்வரும் 24ஆம் திகதி வரை நடைமுறையில் உள்ளது. எனினும், அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் ஊழியர்கள் மற்றும் அத்தியாவசிய தேவையுடையவர்கள் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க பஸ் மற்றும் ரயில் சேவைகளுக்கு இன்று தொடக்கம் மட்டுப்படுத்தப்பட்டளவில் அனுமதியளிக்கப்பட்டது.

அதனடிப்படையில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திலிருந்து இன்று அதிகாலை 5.45 மணிக்கு இ.போ.ச. பஸ் ஒன்று கொழும்பு நோக்கிப் பயணித்தது.

அதேபோன்று வவுனியாவிலிருந்து இன்று காலை மற்றொரு இ.போ.ச. பஸ் கொழும்பு

☞2

### பொதிச் சேவை ஊடாக வந்த

## 88 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது!

88 லட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள், சுங்கத் திணைக்களக் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இத்தாலி மற்றும் இந்தியாவிலிருந்து இலங்கைக்குப் பொதிச் சேவை ஊடாகக் கொண்டுவரப்பட்ட இரண்டு பொதிகளிலிருந்து குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

கொட்டாஞ்சேனை மற்றும் கொழும்பு 02

☞2

## தெல்லிப்பழையில் வீடு உடைத்து பொருள்கள் திருடிய இருவர் கைது



தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு நாள்களுக்கு முன் வீடொன்றை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடிய இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து திருடப்பட்ட ஐ போன் ஒன்று, நான்கு சைக்கிள்கள் உள்ளிட்ட பெறுமதியான பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

சுன்னாகம் மயிலங்காடு பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயதுடைய இளைஞர்கள் இருவரே நேற்றிரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீடொன்றில் இரண்டு நாள்களுக்கு முன்னர் திருட்டு

☞2

## கிளிநொச்சியில் தடுப்பூசி பெற்ற வைத்தியருக்கும் தொற்று உறுதி

கிளிநொச்சி மாவட்டத்தில் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்ட வைத்தியர் ஒருவர் உட்பட 12 பேருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களில் குறைந்திருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்று திடீரென அதிகரித்துள்ளது.

மேற்படி தொற்றாளர்கள்

☞2

### யாழ்ப்பாணம் உள்ளிட்ட 9 மாவட்டங்களில்

## 29 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கத்திலிருந்து விடுவிப்பு

ஒன்பது மாவட்டங்களைச் சேர்ந்த சில கிராம சேவகர் பிரிவுகள் இன்று காலை 6 மணிமுதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய

☞2

## உத்தியோகபூர்வமாகக் கடமையைப் பொறுப்பேற்றார் வவுனியா பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர்





**(வவுனியா நிருபர்)**

வவுனியா பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தர் கலாநிதி ரி.மங்களேஸ்வரன் இன்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம், வவுனியா பல்கலைக்கழகமாக கடந்த மாதம் தரமுயர்த்தப்பட்டிருந்தது.

இதையடுத்து, பல்கலைக்கழகத்தின்

☞2

## ஐஸ் போதைப்பொருளுடன் பேசாலை இளைஞர் கைது!

மன்னார் மாவட்டம், முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முருங்கன் நகரில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் 420 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று முருங்கன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கு அமைவாக மோட்டார் சைக்கிள் ஒன்றைச் செலுத்தி வந்த நபரை வழிமறித்துச் சோதனையிட்ட பொலிஸார், ஐஸ் போதைப்பொருளுடன் குறித்த நபரைக் கைதுசெய்துள்ளனர்.

பேசாலை பிரதேசத்தைச் சேர்ந்த

☞2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## 29 கிராம சேவகர் பிரிவுகள் ..................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். .

அதனடிப்படையில் யாழ்ப்பாணம், கம்பஹா, பதுளை, நுவரெலியா, மட்டக்களப்பு, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலுள்ள 29 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் மானிப்பாய் பொலிஸ் பிரிவின் கீழுள்ள சாவற்காடு கிராம சேவகர் பிரிவு விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று யாழ். மாவட்டத்தின் யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரெக்லமேன் மேற்கு மற்றும் குருநகர் மேற்கு கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவின் கீழுள்ள காரைநகர் கிராம சேவகர் பிரிவின் களின்தெரு மற்றும் கல்வந்தாழ்வு ஆகிய பகுதிகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் காத்தான்குடி பொலிஸ் பிரிவின் புதிய காத்தான்குடி வடக்கு, புதிய காத்தான்குடி தெற்கு, கரபலா வீதி, ஏ.எல்.எஸ்.மாவத்தை, நூறனியா மயான வீதி ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை முதலாம் குறுக்குத் தெரு மற்றும் பிறைந்துறைச்சேனை 2 ஆம் குறுக்குத் தெரு ஆகிய கிராம சேவகர் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் தளர்த்தப்பட்டுள்ளது.

அதேநேரம், பதுளை மாவட்டத்தின் வெலிமடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹூலங்கபொல்ல கிராம சேகவர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தின் கினிகத்ஹேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கரோலினா தோட்டத்தின் கடவள தோட்டப்பிரிவு மற்றும் கொத்மலை பொலிஸ் பிரிவின் பெரமன தெற்கு ஆகிய கிராம சேகவர் பிரிவுகள் விடுவிக்கப்பட்டுள்ளன.

கம்பஹா மாவட்டத்தின் களனி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்பொரள்ள 100 தோட்டமும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

இவைதவிர, களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களிலும் 15 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

## உத்தியோகபூர்வமாகக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முதலாவது துணைவேந்தராக கலாநிதி ரி.மங்களேஸ்வரன் ஜனாதிபதியால் நேற்று நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், இன்று அவர் உத்தியோகபூர்வமாகத் தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

முன்னதாக சர்வமத வழிபாடுகளில் ஈடுபட்ட அவர் மதகுருமார்களிடம் ஆசிகளையும் பெற்றுக்கொண்டார். அதன்பின்னர் வவுனியா பூங்காவீதியில் அமைந்துள்ள அவரது அலுவலகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

அவருக்குப்பல்கலைக்கழக உத்தியோகத்தர்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அவர், நீண்டகால சவால்களுக்கு மத்தியில் வவுனியா பல்கலைக்கழகம் என்ற இலக்கை அடைந்துள்ளோம். இதனை மேலும் விருத்தி செய்வதற்கு அனைவரது பங்களிப்பும் அவசியமாகும் என்றார்.

## ஐஸ் போதைப் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
30 வயது நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோ+ஹண தெரிவித்துள்ளார்.

## குடும்பஸ்தரின் சடலம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
குறித்த நபர் நேற்று மாலை, தனது மாடுகளைப் பார்ப்பதற்காகச் சென்ற நிலையில், இலங்கடிக்குளத்தின் அணைக்கட்டுக்கு அருகாமையில் இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெடுங்கேணிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## தெல்லிப்பழையில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இடம்பெற்றிருந்தது. அதுதொடர்பில் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேகநபர்கள் இருவரைக் கைதுசெய்ததுடன் திருட்டுப் பொருள்களையும் அவர்களிடம் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகநபர்கள் இருவருக்கும் வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புள்ளமை விசாரணைகள் தெரியவந்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் கூறினர்.

## கிளிநொச்சியில் .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அனைவரும், சமூகத்திலிருந்து தொற்றுக்குள்ளானவர்களாவர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கொரோனாத் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டிருப்பினும், சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## கொழும்புக்குப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நோக்கிப் பயணித்தது. இரண்டு பஸ்களும் வவுனியா ஈரப்பெரியகுளம் சோதனைச்சாவடியில் சோதனைக்கு உட்படுத்தியதில் பஸ்களில் பயணித்தவர்களில் பலர் தங்களுடைய அத்தியாவசிய தேவைகளை உறுதிப்படுத்தத் தவறியுள்ளனர்.

அதனால் அத்தியாவசிய தேவைகளின்றிய பயணிகளை ஏற்றிச் சென்றதாக இரண்டு பஸ்களும் ஈரப்பெரியகுளத்தில் வைத்து திருப்பி அனுப்பப்பட்டன.

இதேவேளை, மாகாணங்களுக்கு இடையிலான பஸ் மற்றும் ரயில் சேவைகளில் பயணிப்போர் தமது கடமை அலுவலக அடையாள அட்டை வைத்திருக்க வேண்டும் என்றும், மருத்துவ தேவைகளுக்குப் பயணிப்போர் அது தொடர்பான ஆவணங்கள் வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மக்களுக்கு நன்மை ஏற்படுத்தக்கூடிய ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கௌதாரிமுனையில் இலங்கை - சீனா கூட்டு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு வளர்க்கும் நிலையத்தைப் பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில் -

கடலட்டைப்பண்ணைகளை அமைப்பதன் மூலம் எமது பிரதேச மக்களுக்கு ஏராளமான வேலைவாய்ப்புக்களையும் பொருளாதார நன்மைகளையும் பெற்றுக் கொள்ள முடியும் என்ற அடிப்படையில், ஆய்வு ரீதியாகப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்து பண்ணைகளை அமைக்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

கடலட்டைப்பண்ணைகள் தொடர்பாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள புரிதல் காரணமாக ஏராளமானோர் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். கடந்த ஒன்றரை வருடங்களில் நூற்றுக்கணக்கான பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்திலும் ஆயிரக்கணக்கான பண்ணைகளை உருவாக்கத் திட்டமிடப்பட்டு வருகின்றன.

இவ்வாறான பண்ணைகளுக்கு லட்சக்கணக்கான கடலட்டை குஞ்சுகளை இனப்பெருக்கம் செய்து வளர்க்க வேண்டிய தேவையுள்ளது.

இந்நிலையிலேயே, 2016, 2017 காலப் பகுதியில் அப்போதைய அரசிடம் அனுமதிகளைப் பெற்று, அரியாலையில் கடலட்டை குஞ்சு பொரிக்கும் நிலையத்தை அமைத்த இலங்கை - சீனா நிறுவனம், கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தைக் கௌதாரிமுனையில் அமைத்துள்ளனர். இதற்குத் தேவையான சட்ட ரீதியான அனுமதிகளை இதுவரை பெற்றுக்கொள்ளவில்லை.

கடலட்டைப்பண்ணையைப் பொறுத்தவரையில் அவசியமான அனுமதிகளைப் பெற்று செயற்பாடுகளை ஆரம்பிக்க வேண்டுமாயின் நீண்ட காலம் காத்திருக்க வேண்டியேற்படும்.

எனவே, நாரா - நக்டா - கடற்றொழில் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் ஆகியவற்றின் ஆலோசனைகளைப் பெற்று மக்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாது என்று அடையாளப்படுத்தப்படுகின்ற இடங்களில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்கு தழுவல் அடிப்படையிலான அனுமதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அதேவேளை, எமது மக்களின் பொருளாதார நலன்களையும் நாட்டுக்கான அந்நியச் செலாவணியையும் பெற்றுத் தரக் கூடிய முதலீடுகளையும் தொழில் நுட்ப உதவிகளையும் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறான ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக இந்தியா, மாலைதீவு, பங்களாதேஷ், நோர்வே, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் கலந்துரையாடி இருக்கின்றேன்.

அண்மையில்கூட இந்தியத் தூதுவரை சந்தித்து எமது கடற்றொழிலாளர்களுக்கான வாழ்வாதார ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கோரியிருக்கின்றேன். அதேபோன்று முதலீடுகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் கோரியுள்ளேன்

இவ்வாறான நிலையில்தான், கடந்த அரசால் நாட்டினுள் செயற்பட அனுமதி அளிக்கப்பட்ட குயிலான் நிறுவனம் கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையத்தை கௌதாரிமுனையில் அமைத்திருக்கின்றது.

இது தொடர்பாக நேரடியாக நிலைமைகள் ஆராயப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடனும் கௌதாரிமுனை கடற்றொழிலாளர்களுடனும் கலந்துரையாடி எமது மக்களுக்கும் நாட்டுக்கும் பாதிப்பில்லாத தீர்மானம் மேற்கொள்ளப்படும்.

கௌதாரிமுனை கடலட்டை குஞ்சு வளர்ப்பு நிலையம் தொடர்பாக அரசியல் நோக்கத்தோடு மக்களைக் குழப்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறான சுயநலப் பூச்சாண்டிகளினால் மக்கள் நலச் செயற்பாடுகளைத் தடுக்க முடியாது. மக்களுக்குத் தேவையானதையும் சரியானதையும் செய்வதற்கு எதிராக எத்தகைய எதிர்ப்புக்கள் ஏற்பட்டாலும் எதிர்கொள்ளத் தயங்கப் போவதில்லை.

கடந்த காலங்களில் இவ்வாறான பல சலசலப்புக்களையும் சவாடல்களையும் எதிர்கொண்டு வெற்றி பெற்றமையை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள் - என்றார்.

## 88 லட்சம் ரூபா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்ற முகவரிகளுக்கு இந்தப் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அவற்றிலிருந்து 534 கிராம் ஹசிஷ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சொக்கலேட், சப்பாத்து என்பவற்றுக்குள் மறைத்துவைத்து, குறித்த போதைப்பொருள்கள் நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதி சுங்கப் பணிப்பாளர் சுதத்த சில்வா தெரிவித்துள்ளார்.




நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# வேலிக்கு ஓணான் சாட்சி!

'சட்டியைப் பார்த்து பானை கறுப்பு என்டதாம்' என நாம் கூறுவதுண்டு.

மனித உரிமைகள் விடயத்தில் சீனாவுடன் சேர்ந்து இலங்கை நடந்து கொள்ளும் விவகாரம் பற்றிய தகவலை நோக்கும்போது இந்தப் பேச்சு மொழிதான் நினைவுக்கு வருகின்றது.

இங்கிலாந்தில் மனித உரிமைகளைப் பேணும் நிலைமை மிக மோசமாம். அதைக் கண்டித்தும், அது தொடர்பில் கவலை தெரிவித்தும், வரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 47 ஆவது கூட்டத் தொடரில் அறிக்கை ஒன்றை சீனா சமர்ப்பிக்கப் போகின்றதாம். அந்த அறிக்கையில் சீனாவுடன் சேர்ந்து இலங்கையும் ஒப்பமிடுகின்றதாம்.

– இதுதான் இப்போது வெளியாகியுள்ள தகவல்.

மனித உரிமை மீறல்கள் மோசமாக இடம்பெற்றமை தொடர்பாக சர்வதேசத்தினால் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கும் இலங்கை, இப்போது தான் ஏதே பரிசுத்த தேவன் என்பது போல பிரிட்டனுக்கு எதிராக ஜெனிவா அமர்வில் குற்றம் சுமத்த முன்வந்திருக்கின்றது. அதுவும் சீனாவுடன் சேர்ந்து இக் குற்றச்சாட்டை முன்வைக்க இலங்கை முன்வந்திருப்பது வேடிக்கையிலும் வேடிக்கை.

சேர்மானம் பிழைப்பதால் வரும் தவறுகள் இவை. கூடாத கூட்டத்துடன் சேர்ந்து காரியமாற்றுவதற்கான விளைவை இலங்கை சந்திக்க வேண்டியிருக்கும். விலையைக் கொடுக்க வேண்டி நேரும்.

"பிரிட்டனில் திட்டமிட்ட இனவெறிப் போக்கு, இனப்பாகுபாடு மற்றும் இனஒதுக்கல் செயற்பாடுகள், வெறுப்புப் பேச்சுகள், இனவெறி தொடர்புடைய வன்முறைகள் போன்றவை மோசமாகத் தொடர்கின்றன" – என்று இந்த அறிக்கையில் சீனா குற்றம் சுமத்தியிருக்கின்றது.

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்ற மாதிரி சீனா அடுக்கும் இக் குற்றச்சாட்டுகளுக்கு ஆதரவு தந்து ஒப்பமிட்டிருக்கின்றது இலங்கை.

சீனாவின் இந்த அறிக்கையில் இலங்கையுடன் வடகொரியா, ஈரான், ரஷ்யா, சிரியா, வெனிசூலா, பெலாரஸ், பொலிவியா ஆகிய நாடுகள் ஒப்பமிட்டிருக்கின்றன.

புதிய உலக ஒழுங்கின் பிரகாரம், சிக்கலான ஒரு குழுமத்துக்குள் கொழும்பு சிக்கி வருகின்றமையை இது எடுத்துக் காட்டுகின்றது.

மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் மோசமாக நடந்து கொள்ளும் கொழும்பு ஆட்சிப் பீடம், அதைத் திருத்திக் கொள்வதற்கும், நடந்த தவறுகளுக்கு சர்வதேச நியமங்களின் அடிப்படையில் நியாயம் செய்வதற்கும் மறுத்துத் தொடர்ந்தும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறிப் போக்கில் பயணிக்க முனைப்புடன் நிற்கின்றது.

இதனால் சர்வதேச மட்டத்தில், ஜெனிவா ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸில் போன்ற தளங்களில், மனித உரிமைகள் விடயத்தில் ஏற்படும் அழுத்தங்களைச் சமாளிப்பதற்காகக் கூடாத கூட்டத்தோடு – தவறான அணிகளோடு – கொழும்பு கன்னை கட்டி நிற்பது கண்கூடு.

தன்னுடைய மோசமான மனித உரிமை மீறல்களை, யுத்தக் குற்றங்களை, மனித குலத்துக்கு எதிரான கொடூரச் செயற்பாடுகளை மூடி மறைத்துச் சமாளிப்பதற்காக தப்பான கூட்டத்துடன் அணி கட்டிய கொழும்பு, இப்போது அந்தக் கூட்டம் எடுக்கும் ஏனைய நடவடிக்கைகளுக்குத் தானும் துணை போய் விபரீதங்களை விலைக்கு வாங்கும் நிலைமைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றது.

பிரிட்டனுக்கு எதிராக சர்வதேச தளத்தில் மனித உரிமைகள் குற்றச்சாட்டைப் பகிரங்கமாகச் சுமத்த முற்படும் அணியில் சேர்ந்து கொள்ளும் இலங்கை, கண்ணாடி வீட்டுக்குள் இருந்து கொண்டு கல் எறிகின்றோம் என்பதை மறந்து போய்க் காரியமாற்றுவது வியப்புக்குரியது.

அதுவும், அடுத்த செப்டெம்பரில் – இன்னும் இரண்டு மாதங்களில் – ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை விவகாரம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் நெருக்கடி நிலைமை சூழ்ந்து வருகையில், இந்தச் சிக்கலுக்குள் தன்னைக் கொண்டு போய் மாட்டுகின்றது கொழும்பு அரசு.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகக் கடைசியாக நிறைவேற்றப்பட்ட மோசமான தீர்மானத்தை தயாரித்து முன்மொழிந்த தரப்புகளில் முக்கியமானது பிரிட்டன்.

இதனால், அந்தத் தீர்மான வாசகத்தில் கூறப்பட்ட விடயங்களை இலங்கை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தைத் தர வேண்டிய கடப்பாடுடைய தரப்புகளில் முக்கியமானதாக பிரிட்டன் உள்ளது.

அந்தத் தரப்பை பிழையான பக்கத்தில் சீண்டியிருக்கின்றது கொழும்பு. Rubbing on the wrong side என்பார்கள். அதைத் தான் கொழும்பு செய்கின்றது. அதற்குரிய பாடத்தை அது படிக்க வேண்டி நேரும்.

## 3 கத்தோலிக்க சொரூபங்கள் மீது மன்னாரில் தாக்குதல் சம்பவம்



மன்னார் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட மூன்று இடங்களில் அமைந்துள்ள கத்தோலிக்க சிற்றாலய சொரூபங்கள் மீது இன்று (புதன்கிழமை) அதிகாலை அடையாளந்தெரியாத நபர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மன்னார் வயல் வீதி பகுதியில் காணப்படுகின்ற இரு சொரூபங்களும் மன்னார் பள்ளிமுனை பிரதான வீதியில் அமைக்கப்பட்ட சொரூபம் ஒன்றும் உள்ளடங்களாக மூன்று சொரூபங்கள் மீது கற்கள் வீசி தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த சொரூபங்கள் வைக்கப்பட்டுள்ள கண்ணாடி கூடு உடைந்து சேதமாகியுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில், மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். அதேநேரம் கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க்கிழமைகளிலும் மேலும் மூன்று சிற்றாலயங்கள் மீது இவ்வாறு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பெண்களின் நிர்வாண காணொலிகளை இணையத்தில் வெளியிட்ட 5 பேர் கைது

பெண்களின் நிர்வாணப் படங்கள் மற்றும் காணொலிக காட்சிகளை இணையத்தளம் மற்றும் சமூக ஊடகங்களில் வெளியிட்ட சந்தேகத்தின் பேரில் ஐவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைவாக இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பேச்சாளரும்சிரேஷ்ட பிரதிபொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

புறக்கோட்டை மற்றும் இராஜகிரிய பகுதிகளைச் சேர்ந்த 26 வயதுடைய இருவரும், கண்டி பூஜாபிட்டிய பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய நபரும், பிலியந்தலை பகுதியைச் சேர்ந்த 39 வயது நபரும் மற்றும் கம்பஹா பிரதேசத்தில் 31 வயதுடைய நபரும் இவ்வாறு கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என அவர் தெரிவித்தார்.

31 வயதுடைய நபர் மற்றொரு நபரின் பேஸ்புக் கணக்கில் பிரவேசித்து, கடவுச் சொல்லை மாற்றி, ஆபாசப்படங்களை பதிவேற்றி உள்ளதாக அளிக்கப்பட்ட முறைப்பாடு ஒன்றுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் றோஹண மேலும் தெரிவித்தார்.

## சேதன உரத்தை பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஊக்குவிப்பு

சேதன உரத்தைத் தயாரித்து தமது விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு 12 ஆயிரத்து 500 ரூபா வீதம் உயர்ந்தபட்சம் 02 ஹெக்டேயர்களுக்கு (05 ஏக்கர்கள்) அதிகரிக்காமல் ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனை ஒன்றுக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

2021 – 2022 பெரும்போகத்திற்காக 8 லட்சம் ஹெக்டேயர்கள் அளவில் நெற் செய்கைக்கான சேதன உரத்தைத் தயாரித்துக் கொள்வதற்காக கமத்தொழில் அமைச்சு வேலைத்திட்டமொன்றைத் தயாரித்துள்ளது. அதன் கீழ் பிரதானமாக கமநல சேவைகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் பிரகாரம் விவசாயிகள் தரமான சேதன உரத்தைத் தயாரிப்பதற்கும், அனுமதிப்பத்திர உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படும் சேதனப் பசளையின் அளவுகளை அதிகரிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதற்கமைய, சேதன உரத்தைத் தயாரிக்கும் விவசாயிகளை ஊக்குவிப்பதற்காக சேதன உரத்தைத் தயாரித்து தமது விவசாய நிலங்களுக்குப் பயன்படுத்தும் விவசாயிகளுக்கு ஹெக்டேயர் ஒன்றுக்கு 12 ஆயிரத்து 500 ரூபா வீதம் உயர்ந்தபட்சம் 02 ஹெக்டேயர்களுக்கு (05 ஏக்கர்கள்) அதிகரிக்காமல் ஊக்குவிப்புக் கொடுப்பனவை செலுத்துவதற்காக கமத்தொழில் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## திருமண பந்தத்தில் இணையவுள்ள மணமக்கள் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க அனுமதி

திருமண பந்தத்தில் இணையும் மணமகன், மணப்பெண் ஆகியோர் வெவ்வேறு மாகாணங்களில் வசிப்பவர்களாயின் அவர்கள் மாகாணங்களுக்கு இடையில் பயணிப்பதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொலிஸ் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

பயணக் கட்டுப்பாடுகளின் போது, திருமண நிகழ்வுகளை நடத்துவதில் ஏற்பட்ட சிக்கல்களை கருத்தில் கொண்டு இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், மணமகன் மற்றும் மணப்பெண் ஆகியோரின் பெற்றோர்களும் மாகாணங்களுக்கு இடையில் பயணிக்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலத்திரனியல் வாகனப் பாவனை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் தரவுகளுக்கமைய 2020 ஆம் ஆண்டிறுதியில் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை 80 லட்சத்தைத் தாண்டியுள்ளது.

அவற்றில் குறிப்பிடத்தக்களவு வாகனங்கள் 10 வருடங்களுக்கும் அதிகமாக பழைய வாகனங்கள் ஆவதுடன், அவ்வாறான பழைய வாகனங்கள் சரியான வகையில் பராமரிக்கப்படாமையால் நச்சு வாயுக்கள் வெளியிடப்படுவதற்குக் காரணமாக அமைந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் வாயு மாசடைதலில் 60 வீதமானவை மோட்டார் வாகனங்களால் இடம்பெறுகின்றன எனமொரட்டுவை பல்கலைக் கழகம் மற்றும் இதர நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மீள்பிறப்பாக்க எரிசக்தித் திட்டங்களைத் துரிதமாக மேற்கொள்வது அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணியாக அமைவதால், மோட்டார் வாகனப் போக்குவரத்துக்கு மீள்பிறப்பாக்க எரிசக்தியைப் பயன்படுத்துதல் தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, இலத்திரனியல் வாகனப் பாவனையை ஊக்குவிப்பதற்காக மூலோபாயத் திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக சுற்றாடல் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# தமிழ்நாட்டைப் பிரிக்க முடிவு செய்தால் கடுமையான போராட்டம் நடக்கும்!

## பழ.நெடுமாறன் எச்சரிக்கை



தமிழ்நாட்டைப் பிரிக்க முடிவு செய்தால், அதை எதிர்த்துக் கடுமையான போராட்டம் நடக்கும் என்று தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பழ.நெடுமாறன் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், தமிழ்நாட்டின் மேற்கு மாவட்டங்களைப் பிரித்து 'கொங்கு நாடு' என்ற பெயரில் புதிய மாநிலத்தை உருவாக்குவது பற்றி இந்திய அரசு ஆராய்ந்து வருவதாகச் செய்தி வெளியாகியுள்ளது. இம்முயற்சி உண்மையாக இருக்குமானால், அதை எதிர்த்துத் தமிழர்கள் மிகக் கடுமையாகப் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகும் என எச்சரிக்க விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் தமிழ்நாட்டை வடக்கு, தெற்கு எனப் பிரித்து இரு மாநிலங்களாக்கும் கோரிக்கையை சிலர் எழுப்பினர். அப்போதும் தமிழர்களின் கடும் எதிர்ப்பின் விளைவாக அத்தகைய கோரிக்கை கைவிடப்பட்டது. சங்க காலத்திலிருந்து 1956 ஆம் ஆண்டு மொழி வழியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்ட காலம் வரை தமிழ்நாடு என்றும் ஒரே நாடாக இருந்ததில்லை. மூவேந்தர்களும், வேறு பல மன்னர் குலத்தினரும் பிரித்து ஆண்ட சிறுசிறு நாடுகளாகத்தான் திகழ்ந்தது. பிறகு, அந்நியர்களின் படையெடுப்புக்கு ஆளாகி அடிமைப்பட்டது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் சென்னை மாகாணம் என்ற கூண்டிற்குள் தமிழகம் அடைக்கப்பட்டுத் தவித்தது.

1956 ஆம் ஆண்டில்தான் தமிழ்நாடு முதன் முதலாக ஒன்றுபட்ட மாநிலமாக ஆக்கப்பட்டது. அப்போதும் சில பகுதிகளை நாம் இழக்க நேரிட்டது. தமிழ்நாட்டுத் தமிழர்களும் உலக நாடுகளில் வாழும் தமிழர்களும் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வரும் இவ்வேளையில், தமிழ்நாட்டுத் தமிழர்கள் ஒன்றுபட்டு நின்று போராடாவிட்டால் நம்மையும் காப்பாற்றிக்கொள்ள முடியாது, நம்மை நம்பியிருக்கிற உலகத் தமிழர்களையும் காக்க முடியாது. எனவே, தமிழ்நாட்டைப் பிரிக்கும் செயல் எந்த வடிவத்தில் வந்தாலும் அதை எதிர்த்துப் போராடத் தயாராகுமாறு அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன் எனத் தெரிவித்திருக்கிறார்.

## தொடர் விடுப்பு கோரி நளினி மனு



முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதாகி வேலூர் மத்திய சிறையில் உள்ள முருகனையும் பெண்கள் தனிச் சிறையில் உள்ள முருகனின் துணைவியாரான நளினியையும் அவர்களது வழக்கறிஞர் புகழேந்தி நேற்றுச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர்களை விடுப்பில் வெளியே கொண்டுவருவது தொடர்பாக சில விடயங்கள் பேசப்பட்டன என தகவல்கள் வெளிவந்துள்ளன.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகவியலாளர்களோடு பேசிய வழக்கறிஞர் புகழேந்தி, கணவர் முருகனையும் தன்னையும் தொடர் விடுப்பில் விடுவிக்கக்கோரி உங்கள் தொகுதியில் முதல்வர் திட்டப் பிரிவுக்கு நளினி மனு அளித்துள்ளார். இது தொடர்பாக நளினியின் தாயார் பத்மா, இந்த வாரத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து நேரில் வலியுறுத்தவுள்ளார் என்று தெரிவித்திருக்கிறார்.

## நீதிமன்றத்தை அவதூறாகப் பேசிய வழக்கில் எச்.ராஜா முன் பிணை மனுத் தாக்கல்



நீதிமன்றத்தை அவதூறாகப் பேசினார் எனத் தொடரப்பட்ட வழக்கில் முன் பிணைகோரி பா.ஜ.கவின் முன்னாள் தேசிய செயலாளர் எச்.ராஜா உயர்நீதி மன்ற மதுரைக்கிளையில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், கடந்த 2018 ஆம் ஆண்டு திருமயம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பகுதியில் கோயில் நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் சென்றபோது, மேடை அமைப்பது தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினையில் திருமயம் காவல் ஆய்வாளர் மனோகரன் என் மீது அளித்த புகாரின் அடிப்படையில், திருமயம் காவல் நிலையத்தில் நான் உட்பட பல்வேறு நபர்கள் மீது வழக்குப் பதியப்பட்டு, தற்போது அந்த வழக்கில் திருமயம் கீழமை நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்தக் குற்றப்பத்திரிகையில் நான் தலைமறைவாக உள்ளேன் எனத் தெரிவித்துள்ளனர். இது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாகக் கூறப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு கீழமை நீதிமன்றம் எனக்கு அழைப்பாணை அனுப்பியுள்ளது.

எனவே, இந்த வழக்கில் காவல் துறையினர் என்னைக் கைது செய்யும் நடவடிக்கையில் ஈடுபடாமல் இருப்பதற்காக முன் பிணை வழங்க வேண்டும். இது தொடர்பாக நீதிமன்றம் விதிக்கும் அனைத்துக் கட்டுப்பாடுகளையும், நிபந்தனைகளையும் பின்பற்றுவேன் எனத் தெரிவித்துள்ளார். இந்த மனு தொடர்பான வழக்கு விரைவில் விசாரணைக்கு வர உள்ளதாக நீதிமன்றத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

## சிவசங்கர் பாபா நீதிமன்றக் காவலில்



இரண்டாவது போக்சோ வழக்கில் கைதுசெய்யப்பட்ட சிவசங்கர் பாபாவை வரும் 27 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கேளம்பாக்கம் சுஷில் ஹரி பள்ளியின் தாளாளர் சிவசங்கர் பாபா மீது மாணவிகள் பாலியல் ரீதியான அத்துமீறல்களைச் செய்தார் என புகார் அளித்தனர். இதனையடுத்து அவர் மீது போக்சோ சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. டெல்லியில் கைது செய்யப்பட்ட அவர், செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். இதுவரை 8 முன்னாள் மாணவிகள் புகார் அளித்துள்ள நிலையில், இவர் மீது 3 போக்சோ வழக்குகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இதில் ஒரு போக்சோ வழக்கில் மட்டும் சிவசங்கர் பாபா கைதுசெய்யப்பட்டிருந்தார்.

தற்போது இரண்டாவது போக்சோ வழக்கில் சென்னை சி.பி.சி.ஐ.டி. காவல் துறையினர் அவரைக் கைது செய்துள்ளனர்.

புழல் சிறையில் இருக்கும் சிவசங்கர் பாபா இரண்டாவது போக்சோ வழக்குக்காக செங்கல்பட்டு போக்சோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். அப்போது அவருக்குப் பதினைந்து நாள்கள் நீதிமன்றக் காவல் விதிக்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து அவர் மீண்டும் புழல் சிறையில் அடைக்கப்பட்டார்.

## தமிழ் நாட்டை இரண்டாகப் பிரித்தால் இந்தியாவை 39 ஆகப் பிரிக்கலாம்!

தமிழ்நாட்டின் ஒரு பகுதியை 'கொங்கு நாடு' என்று பிரிப்பதற்கு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன என எழுந்திருக்கும் சர்ச்சை குறித்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தமிழக ஊடகமொன்றுக்குத் தனது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

'கொங்கு நாடு' என்று எங்களைப் பிரிக்க நீங்கள் யார்? முதலில் இந்தியா உங்கள் நாடா? நீங்கள் வந்தவர்கள். நாங்கள் இங்கேயே பிறந்து வாழ்ந்தவர்கள். உங்கள் பரம்பரையின் வேர் என்ன? அதிகாரம் இருக்கிறது என்பதற்காக எதையாவது செய்துகொண்டிருப்பதா? காஷ்மீரை அதிகாரத்திமிரில் உடைத்தீர்கள். அதற்குக் காரணமாக, போர், தீவிரவாதம் என்று சொன்னதை ஏற்றுக்கொண்டோம். ஆனால், தமிழ் நாட்டைப் பிரிப்போம் என்றால் எங்கள் வேலையைக் காட்ட ஆரம்பித்துவிடுவோம் என்று கொதித்தெழுந்திருக்கிறார் சீமான்.

கச்சத்தீவை எங்கள் மண்ணோடு இணையுங்கள். காவிரி நதி நீரைப் பெற்றுத்தாருங்கள். முல்லைப் பெரியாறு உரிமையை நிலைநாட்டுங்கள். மேகதாதுவில் அணை கட்டுவதை நிறுத்துங்கள். இந்தியைத் திணிக்காமல் என் தாய் மொழியைப் படிக்க வாய்ப்புக் கொடுங்கள். ஜி.எஸ்.டி. நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதைச் சொல்லுங்கள். இப்படி நாங்கள் மத்திய அரசிடம் பலவற்றைக் கேட்கிறோம். ஆனால், நாங்கள் கேட்பதையெல்லாம் கொடுக்காமல் கேட்காத ஒன்றைத் தருகிறேன் என்றால் எப்படி அனுமதிக்க முடியும்? தமிழகத்திற்கு எத்தனையோ நிர்வாகப் பிரச்சினைகள் உள்ளன. முதலில் அவற்றைச் சரி செய்யுங்கள். ஏற்கனவே, நிர்வாக வசதிக்காக பல மாவட்டங்களை இரண்டாகப் பிரித்துவிட்டார்கள். இதுவரை எங்கள் மாநிலத்தை இரண்டாகப் பிரியுங்கள் என்று நாங்கள் யாராவது கேட்டோமா? மொழி, இனம், நிலம் வாரியாகத்தான் இதுவரை மாநிலங்களைப் பிரித்திருக்கிறார்கள். ஆனால், சாதி ரீதியாக கொங்கு நாடு என்று பிரிப்பதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? என்று அவர் கேள்வியெழுப்பியிருக்கிறார்.

தமிழ் நாட்டை இரண்டாகப் பிரிக்கட்டும். அப்படிப் பிரித்தால் இந்தியாவை 39 நாடுகளாகப் பிரிக்கலாம். அதற்கு வாய்ப்பிருக்கிறது. நான் வழிகாட்டுகிறேன். பிரிப்பார்களா? தமிழகத்தை இரண்டாகப் பிரிப்பதற்குப் பதிலாக சேலம், மதுரை, திருச்சி, கன்னியாகுமரி என நான்கு தலைநகரங்களை உருவாக்குங்கள். அனைத்தையும் ஒரே இடத்தில் வைத்தால் நகரங்கள் பிதுங்கி வழியும். அதனால்தான், தலைநகரங்களைப் பிரித்து வைக்க வேண்டும் என்கிறோம். ஜெகன் மோகன் ரெட்டி, மம்தா பானர்ஜி எல்லாம் நான் சொன்னதைத்தான் சொல்கிறார்கள்.

பா.ஜ.க., நியாயமான அரசாக இருந்தால் இந்தியாவைத்தான் இரண்டாகப் பிரிக்கவேண்டும். தமிழ் நாட்டை அல்ல. வட கொரியா – தென் கொரியா, கிழக்கு தைமூர் – மேற்கு தைமூர் மாதிரி, இந்தியாவை வட இந்தியா, தென்னிந்தியா என்று இரண்டாகப் பிரியுங்கள். இரண்டு நாடாளுமன்றத்தை உருவாக்குங்கள். கொங்கு நாடு என்று தனியாகப் பிரித்துவிட்டால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிடும் என்று நினைக்கிறது. கொங்கு மண்டலத்தை ஐந்து அல்ல. ஆறாகப் பிரித்தால்கூட பா.ஜ.க. ஆட்சிக்கு வர முடியாது. தலைகீழாக நின்று தண்ணீர் குடித்தாலும் ஆட்சிக்கு வரவே முடியாது. கொங்கு நாடு என்று பா.ஜ.க. ஆரம்பித்தால் நான் இந்தியாவை இரண்டாகப் பிரியுங்கள் என்று ஆரம்பித்துவிடுவேன். உங்களை விட வலுவாக போராட ஆரம்பித்துவிடுவேன். என் கருத்தில் நிறையப்பேர் உடன்பட்டுக்கொண்டு கொங்குநாடு என்ற புதிய பிரச்சினைக்கு யார் மணிக்கட்டுவார்கள் என்று தெரியாமல் உட்காந்திருக்கிறார்கள். நான் ஆரம்பித்து விட்டால் குவிந்து கொந்தளித்துவிடுவார்கள்! என்று கூறியிருக்கும் சீமான், ஆரம்பிக்கவா? என்றும் கேட்டிருக்கிறார். கொரோனா ஊரடங்கால் மக்களுக்கு வருமானமில்லை. வீட்டிற்குள் அடைந்து கிடக்கிறார்கள். சாப்பாட்டுக்கே வழியில்லை. ஆனால், இணைய வழிக் கல்வியில் முழுக் கல்விக் கட்டணத்தைக் கட்டச் சொல்கிறார்கள். இதையெல்லாம் கவனிப்பதில்லை. இந்த நேரத்தில் பெற்றோல் விலையை ஏற்றுகிறார்கள்.




முதலில் நாட்டு மக்களின் பிரச்சினையைப் பாருங்கள். இதைப் பிரிப்பது அதைப்பிரிப்பதெல்லாம் உங்கள் வேலை இல்லை. 'காஷ்மீர் பிரிவினைவாதி, ஈழப் பிரிவினைவாதி' என்று எங்களைச் சொல்கிறீர்கள். உண்மையிலேயே நீங்கள்தான் பிரிவினைவாதிகள். நாங்கள் பிரிக்கச் சொல்லவே இல்லை. கச்சத்தீவை எங்களோடு இணையுங்கள் என்கிறோம்.

அருணாச்சலப் பிரதேசம் இந்தியாவுடையதா? சீனாவுடையதா? என்பது குறித்து பிரதமரையும் பா.ஜ.கவினரையும் பேசச்சொல்லுங்கள். ஏன், வானதி சீனிவாசனிடம் கேளுங்கள். இவர்களை அருணாச்சலப் பிரதேசத்தின் நடுவில் நின்று ஒரேயொரு முறை பேசிவிட்டு வரச்சொல்லுங்கள். வாக்குச் சேகரிக்கப் போகும் போதே, அந்த மாநிலத்தின் ஓரத்தில் போய்ப் பேசிவிட்டு வந்துவிடுகிறார்களே, ஏன்? இதையெல்லாம் செய்துவிட்டு பிறகு தமிழ்நாட்டைப் பிரிக்கலாம்! என்றும் தனது கருத்துக்களைப் பதிவுசெய்திருக்கிறார் சீமான்.

# தென்னாபிரிக்காவில் கலவரம் கடைகள் சூறை தீ வைப்பு!




தென் ஆபிரிக்காவில் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜுமா சிறையில் அடைக்கப்பட்டமையைக் கண்டித்து, நாடு முழுவதும் 5 நாள்களாக நீடிக்கும் வன்முறை மற்றும் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் 75 பேர் கொல்லப்பட்டனர்.

தென் ஆபிரிக்காவில் கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து 9 ஆண்டுகள் அதிபராக இருந்தவர் ஜேக்கப் ஜுமா. 9 ஆண்டு கால பதவிக் காலத்தில், தன்னுடைய அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி அரசு சொத்துக்களை கொள்ளையடித்தார் என இவர் மீது குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இதையடுத்து ராஜினாமா செய்த அவர் மீது நடத்தப்பட்ட விசாரணையில் ஜுமாவுக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவரது ஆதரவாளர்கள் அவரை விடுவிக்க வலியுறுத்தி கடந்த 5 நாள்களாக கலவரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். பெரு வணிக நிறுவனங்களில் புகுந்த அவர்கள் அங்கிருந்த பொருள்களை கொள்ளையடித்துச் சென்றனர்.

டர்பனில் உள்ள லென்மண்ட் மருத்துவமனையை கலவரக்காரர்கள் தீயிட்டு எரித்தனர். இதையடுத்து அங்கிருந்த நோயாளிகள், மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அலறியடித்து ஓட்டம் பிடித்தனர்.

ஜோகன்னஸ்பர்க்கில் உள்ள சோவெட்டோவில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் கொள்ளையடிக்க முயன்றபோது ஏற்பட்ட நெரிசலில் 10 பேர் கொல்லப்பட்டனர். அப்போது நெருப்பில் சிக்கிய ஒரு பெண் தனது குழந்தையை கீழே நின்றவர்களிடம் தூக்கி வீசினார். இறுதியில் அந்த வணிக வளாகம் வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

தொடர்ந்து வரும் போராட்டங்களையும், வன்முறைகளையும் கட்டுப்படுத்த கலவரக்காரர்கள் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்தினர். தென்னாபிரிக்காவில் கலவரம் பரவி வருவதால் 75 ஆயிரம் வீரர்கள் நாடு முழுவதும் களமிறக்கப்பட்டுள்ளனர்.

# டோக்கியோ ஒலிம்பிக் தொடக்க விழா ஜில் பைடன் கலந்து கொள்ளவுள்ளார்



ஜப்பான் டோக்கியோ நகரில் வருகிற 23 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 8 ஆம் திகதி வரை ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற இருக்கின்றன. இதில் பங்கேற்க தகுதி பெற்ற வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் டோக்கியோ செல்ல தயாராகி வருகின்றனர்.

ஜுலை 23 ஆம் திகதி தொடக்க விழா நடைபெறும். இந்த விழாவில் வீர், வீராங்கனைகள் தங்களுடைய நாட்டின் கொடிகளை ஏந்தி அணிவகுத்துச் செல்வார்கள். முக்கிய தலைவர்கள், பிரபலங்கள் கலந்து கொள்வார்கள்.

அந்த வகையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் மனைவியும், அமெரிக்காவின் முதல் பெண்மணி என அழைக்கப்படுபவருமான ஜில் பைடன், டோக்கியோ ஒலிம்பிக் தொடக்க விழாவில் கலந்து கொள்வதற்காக ஜப்பான் செல்வார் என அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

# அமெ.யில் டீசல் ஏற்றிச் சென்ற டாங்கர் லொறி தீப்பிடித்து விபத்து



அமெரிக்காவில் எரிபொருள் ஏற்றிச் சென்ற டாங்கர் லொறி நிலைதடுமாறி சாலையின் பக்கவாட்டுச் சுவரில் மோதி வெடித்துச் சிதறியது.

மிச்சிகன் மாகாணத்தில் உள்ள ட்ராய் என்ற இடத்தில் 52 ஆயிரம் லீற்றர் டீசலை ஏற்றிக் கொண்டு டாங்கர் லொறி சென்று கொண்டிருந்தது. அப்போது நிலைதடுமாறிய அந்த லொறி சாலையின் பக்கவாட்டுச்சுவரில் மோதி விபத்துக்குள்ளானது. அடுத்த சில நொடிகளில் அந்த லொறி தீப்பிடித்து வெடித்துச் சிதறியது.

இந்த விபத்தில் லொறியின் சாரதி சிறிய காயங்களுடன் தப்பினார். தகவலறிந்து வந்த தீயணைப்புத் துறையினர் நீண்ட நேரம் போராடி நெருப்பைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# மியன்மாரில் கொரோனா பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில் ஒக்சிஜன் நிரப்புவதற்காக சிலிண்டர்களுடன் வீதியில் மக்கள்

மியன்மாரில் கொரோனாப் பாதிப்பு அதிகரித்துள்ள நிலையில், யாங்கூன் நகரில் ஒக்சிஜன் நிரப்புவதற்காக சிலிண்டர்களுடன் வீதியில் மக்கள் காத்திருக்கும் காட்சிகள் வெளியாகியுள்ளன.

சிலிண்டர்கள் சாலையோரமாக நீண்ட வரிசையில் வைக்கப்பட்டு, ஒக்சிஜன் நிரப்பும் வாகனத்திற்காக மக்கள் காத்திருந்தனர். மியன்மாரில் ஒக்சிஜன் தட்டுப்பாடு நிலவுவதாக பொதுமக்கள் கூறும் நிலையில், பதுக்கலை தடுப்பதற்காகவே தனிநபர்களுக்கான ஒக்சிஜன் விநியோகம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என அங்குள்ள இராணுவ ஆட்சி கூறியுள்ளது.



# 24 ஆண்டுக்கு முன்பு கடத்தப்பட்ட மகனை தேடிக் கண்டுபிடித்த தந்தை



சீனாவில் குழந்தை கடத்தல் மிகப் பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. ஒவ்வொரு ஆண்டும் ஆயிரக் கணக்கான குழந்தைகள் கடத்தப்படுகின்றனர்.

இந்நிலையில் சீனர் ஒருவர் 2 வயதில் கடத்தப்பட்ட தனது மகனை 24 வருடங்களாக தேடி இறுதியில் அவனுடன் இணைந்த நெகிழ்ச்சி சம்பவம் நடந்துள்ளது.

கடந்த 1997 ஆம் ஆண்டு ஷாங்டாங் மாகாணத்தைச் சேர்ந்த குவோ கேங்டாங் என்பவரின் 2 வயது மகன் வீட்டுக்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த போது கடத்தல்காரர்கள் இருவர் அவனை கடத்தி சென்று விற்று விட்டனர். பொலிஸார் அந்த கடத்தல்காரர்களை கைது செய்த போதும் குவோ கேங்டாங்கின் மகனை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இதையடுத்து தனது மகனை தானே தேடி கண்டுபிடிக்க முடிவு செய்த குவோ கேங்டாங் தன்னிடம் இருந்த பணத்தை வைத்து ஒரு மோட்டார் சைக்கிளை வாங்கி ஒவ்வொரு மாகாணமாக சென்று தேடினார்.

கையில் இருந்த மொத்தப் பணமும் தீர்ந்து போன நிலையில் தனது பயணத்தைத் தொடர்வதற்காக அவர் பிச்சை எடுத்தார். இந்த பயணத்தின் போது பலமுறை விபத்துக்குள்ளாகி அவரது எலும்புகள் முறிந்தன. வழிப்பறி கொள்ளையர்களிடம் சிக்கி பணம் உள்ளிட்டவற்றை இழந்துள்ளார்.

ஆனாலும் அவர் தனது தேடலை நிறுத்தவில்லை. தனது மகனைத் தேடி 20 மாகாணங்களில் கிட்டத்தட்ட 5 லட்சம் கி.மீ. பயணம் செய்தார். அவரின் இந்த அயராத முயற்சிக்கு 24 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது பலன் கிடைத்துள்ளது. 2 வயதில் கடத்தப்பட்ட தனது மகனை அவர் கண்டுபிடித்து அவனுடன் இணைந்து விட்டார்.

# ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசியால் நரம்புக் கோளாறு – எவ்.டி.ஏ. தெரிவிப்பு




அமெரிக்காவில் ஜோன்சன் அண்ட் ஜோன்சன் நிறுவனம் தடுப்பூசி ஒன்றை உருவாக்கி, பயன்பாட்டுக்கு கொண்டு வந்துள்ளது. இந்த தடுப்பூசி ஒற்றை டோஸ் தடுப்பூசி ஆகும். ஆனால் இந்த தடுப்பூசியால் 'குய்லின் பார் சிண்ட்ரம்' என்ற அரிய வகை நரம்புக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று தெரிய வந்துள்ளது.

இந்த வகை நரம்புக் கோளாறு ஏற்படுகிறபோது உடலின் நோய் எதிர்ப்பு மண்டலம், நரம்பு செல்களை சேதப்படுத்துகிறது, இதனால் தசை பலவீனம் அடைகிறது. சிலநேரங்களில் பக்கவாதம் ஏற்படுகிறது. இந்த தகவல்களை அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் (எவ்.டி.ஏ.) வெளியிட்டுள்ளது.

ஜோன்சன் அண்ட் ஜோன்சன் தடுப்பூசியை செலுத்திக் கொண்டவர்களில் சிலருக்கு இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இந்த பாதிப்பு, தடுப்பூசியை செலுத்திக் கொண்ட 42 நாளில் ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில், இது ஏற்படுவது மிகவும் அரிதான ஒன்று என்றும் அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகம் கூறுகிறது.

இதுவரை 1 கோடியே 28 லட்சம் பேர் இந்த தடுப்பூசி செலுத்திக் கொண்டதில் ஏறத்தாழ 100 பேருக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக முதல் கட்டத் தகவல்கள் கூறுகின்றன. இவர்களில் 95 சதவீதத்தினர் நிலைமை மோசமாகி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். ஒருவர் இறந்தும் விட்டார். பெரும்பாலும் 50 வயதுக் கடந்த ஆண்களுக்கே இந்த பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# கொரோனாப் பாதிப்பு 18.85 கோடியைக் கடந்தது

சீனாவின் வுகான் நகரில் வெளிப்பட்ட கொரோனா வைரஸ் உலக நாடுகளை உலுக்கி வருகிறது. இந்நிலையில், உலக அளவில் கொரோனாவால் பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 18.85 கோடியைக் கடந்துள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பில் இருந்து 17.24 கோடிக்கும் அதிகமானோர் குணமடைந்துள்ளனர்.

மேலும், வைரஸ் தாக்குதலுக்கு இதுவரை 40.65 லட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

வைரஸ் பரவியவர்களில் 1.20 கோடிக்கும் அதிகமானோர் சிகிச்சை பெற்று வருகின்றனர். 78 ஆயிரத்து 500 இற்கும் அதிகமானோரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

கொரோனா வைரஸ் பாதிப்பு அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா, இந்தியா, பிரேஸில், ரஷ்யா, பிரான்ஸ் ஆகியவை முதல் 5 இடங்களில் உள்ளன.

# மட்டக்களப்பைச் சேர்ந்த விஞ்ஞானிக்கு லண்டனில் விருது மூலம் அங்கீகாரம்

ஸ்வான்சீ பல்கலைக்கழகம் இலங்கை நுண்ணுயிரியலாளர் டாக்டர் கனகசூரியம் கனகச்சந்திரனுக்கு கௌரவப் பட்டம் வழங்கியுள்ளது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் அவரது 20 ஆண்டுகால பங்களிப்பை அங்கீகரித்துள்ளது. கடந்த காலங்களில் பல உலக பிரபலங்கள் இந்த விருது மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

டாக்டர் கனகச்சந்திரன் தற்போது லண்டன் பங்குச் சுட்டெண் 100 பட்டியலிடப்பட்ட உலகளாவிய பூச்சி கட்டுப்பாடு மற்றும் சுகாதார நிறுவனமான ரெண்டோகில் தயாரிப்பு மேம்பாட்டு மற்றும் ஆராய்ச்சி புதிய மேம்பாட்டு மேலாளராக உள்ளார். புதுமை மற்றும் எதிர்கால வணிக வளர்ச்சியை வழங்குவதற்கான முக்கிய உலகளாவிய கல்வி மற்றும் தொழில்துறை கூட்டாளர்களுடன் மூலோபாய உறவுகளை அடையாளம் கண்டு வளர்ப்பதே அவரது தற்போதைய பணி.

டாக்டர் கனகச்சந்திரன் கிழக்கு இலங்கையின் மட்டக்களப்பில் பிறந்தார் மற்றும் இலங்கையின் பழைமையான மதிப்புமிக்க கல்லூரிகளில் ஒன்றான சென்ட் மைக்கேல் கல்லூரியில் தனது முதன்மை மற்றும் இடைநிலைக் கல்வியை முடித்தார். அவர் பயன்பாட்டு உயிரியலில் இளங்கலை பட்டமும், தொழில்துறை நுண்ணுயிரியலில் முனைவர் பட்டமும் ஹெர்ட்ஃபோர்ட்ஷைர் பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். அதற்கு பிறகு, பின் முனைவர் பட்டம் ஹல் பல்கலைக்கழகத்தால் வழங்கப்பட்டது.

ஒரு சிறந்த எதிர்கால மாற்றத்திற்கான ஒரு முகவராக உயிரி தொழில்நுட்பவியலை பயன்படுத்துவதற்கான அவரது ஆர்வத்தைத் தொடர, நுண்ணுயிரியல், உயிரி தொழில்நுட்பம் ,கழிவு மீட்பு மற்றும் உணவு உற்பத்தியை உள்ளடக்கிய பசுமை செயல்முறை உத்திகள் பற்றிய புகழ்பெற்ற சர்வதேச அறிவியல் இதழ்களில் தனது பெயரில் ஏராளமான வெளியீடுகளை செய்துள்ளார்.

அவரது சாதனைகளில், மீன் அல்லாத மூலங்களிலிருந்து ஒமேகா - 3 எண்ணெய்களை உற்பத்தி செய்தல், தொழிற்துறை துணை தயாரிப்புகளை மறுசுழற்சி செய்தல் மற்றும் உயிரி எரிபொருளாக மாற்றுவது போன்ற தொழில்நுட்பங்களின் கண்டுபிடிப்பு மற்றும் காப்புரிமை ஆகியவை அடங்கும். உணவு வழங்கல் சங்கிலியில் உணவுப்ஷ பாதுகாப்பு மற்றும் இழப்பு தொடர் பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேதியியல் மற்றும் உணவு சுகாதாரம் குறித்த உலகளாவிய உணவுபாதுகாப்புமுயற்சிதொழில்நுட்பசெயற்குழுவிலும் அவர் பங்களித்துள்ளார்.

உலகிற்கும் மக்களுக்கும் சிறந்த எதிர்காலத்திற்கான மாற்றத்தை உருவாக்கும் ஆர்வத்துடன் மிகவும் குறிப்பாக இயற்கை தயாரிப்பு கண்டுபிடிப்புத் துறை, ஆராய்ச்சி திட்ட கருத்துருவாக்கம் முதல் தயாரிப்பு,தொழில்நுட்ப வணிகமயமாக்கல் வரை அவருக்கு கணிசமான தொழில்துறை அனுபவம் உள்ளது. டாக்டர் கனகச்சந்திரன் உயிரியல்பூச்சிக்கொல்லி மையப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் உட்பட பல்வேறு நிறுவனங்களில் சக ஊழியர்களுடன் ஒத்துழைக்க பல பகுதிகளை அடையாளம் கண்டுள்ளார். அவர் சந்தைக்கு தயாரிப்புகளைப் பெறுவது தொடர்பான அனுபவம், ஒழுங்குமுறை அதிகாரம், கள சோதனைகளை நிறைவேற்றுவதில் நிபுணத்துவம் கொண்டிருக்கிறார்.

ஸ்வான்சீ பல்கலைக்கழக கௌரவ பெல்லோஷிப் பட்டம் ஆண்டுதோறும் தனிநபர்களுக்கு சமூகத்தின் சிறப்பான சாதனை மற்றும் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்படுகிறது. முந்தைய பெறுநர்கள் அறிவியல், தொழில்நுட்பம், அரசியல், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் இருந்து வருகிறார்கள்.

# ஆலையடிவேம்பில் வீடுகள் அமைக்கும் பணி ஆரம்பம்



ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக மீள்குடியேற்ற அமைச்சினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 லட்சம் பெறுமதியான 55 வீடுகளும் 6 லட்சம் பெறுமதியான 24 வீடுகளும் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவின் மகாசக்தி கிராமத்தில் வறுமைக்குட்பட்ட சித்த சுவாதீனமுற்ற தாயுடன் குடிசையொன்றில் வாழ்ந்து வரும் இளம் யுவதி ஒருவரின் வீடமைப்பிற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த வீடமைப்பிற்கான ஆளணி உதவிகள் அக்குடும்பத்தில் இல்லாத நிலையில் இராணுவத்தின் ஆளணி உதவியுடன் வீட்டினை நிர்மாணிப்பதற்கான பொறுப்பினை இராணுவம் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

இதற்கமைவாக ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற அடிக்கல் நடும் நிகழ்வில் இராணுவத்தின் 241ஆம் படைப்பிரிவின் பிரதானி பிரிக்கேட் கொமாண்டர் பிரிகேடியர் டபிள்யு.வி.ஜே.கே.ஜானக விமலரெத்தின பிரதம விருந்தினராக கலந்து கொண்டு வீடமைப்பிற்கான அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

நிர்மாணிக்கப்படவுள்ள வீட்டின் திட்ட அமைப்பு தொடர்பிலான வரைபடத்தை பார்வையிட்டதுடன் மேலதிக தகவல்களையும் பெற்றுக்கொண்டு வீடமைப்பு தொடர்பான ஆலோசனைகளையும் பிரதேச செயலாளர் மற்றும் பிரிகேடியர் உள்ளிட்டவர்கள் இராணுவத்தினருக்கு வழங்கினர்.

நாட்டில் நிலவும் கொரோனா நிலைக்கு மத்தியிலும் இராணுவத்தினர் ஆலையடிவேம்பு பிரதேசசெயலகத்ததுடன் இணைந்து மனிதாபிமானபணிகளைதொடர்ந்தும் முன்னெத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ் நகரில் கச்சேரிக்கு அருகாமையில் வீட்டில் தங்கியிருந்து வேலை செய்ய பணிப்பெண் தேவை. வயது 20 - 40 விரும்பத்தக்கது.

**தொடர்புகளுக்கு - 0782736950**




# 9 மாவட்டங்களைச் சேர்ந்த 29 கிராம சேவகர் பிரிவுகள் கொரோனா தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிப்பு

கொழும்பு, ஜூலை 14

இலங்கையின் 9 மாவட்டங்களைச் சேர்ந்த 29 கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் இடங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்ப்பாணம், கம்பஹா, நுவரெலியா, மட்டக்களப்பு, இத்திரனபுரி, கேகாலை, பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களின் 29 கிராம சேவகர் பிரிவுகள் மற்றும் இடங்கள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

# மட்டக்களப்பிலிருந்து தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் இன்று முதல் ஆரம்பமாகின

பயணத்தடை மற்றும் மாகாணங்களுக்கிடையிலான பயணத்தடைகள் காரணமாக சுமார் இரு மாதங்களாகத் தடைப்பட்டிருந்த மட்டக்களப்பிற்கும் கொழும்பு உட்பட தூர இடங்களுக்குமான பஸ் சேவைகள் இன்று காலை முதல் ஆரம்பமாகின.

இலங்கை போக்குவரத்துச் சபையின் மட்டக்களப்பு டிப்போ ஊடாக குறித்த பஸ் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என மட்டக்களப்பு டிப்போ முகாமையாளர் தெரிவித்தார்.

இன்று அத்தியாவசிய மற்றும் காரியாலய சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.கொரோனா சுகாதார நடைமுறைகளைப் பேணி பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இன்று அதிகாலை 6.30 மணிக்கு மட்டக்களப்பிலிருந்து கொழும்பிற்கான முதலாவது பஸ் சேவை ஆரம்பமானது.பதுளை, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற தூர இடங்களுக்கும் பஸ் சேவைகள் இடம்பெற்றன.

# மட்டக்களப்பு வைத்தியசாலைகளுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கல்

## தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால்



மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட ஐந்து வைத்தியசாலைகளுக்கு கொரோனா பாதுகாப்பு உபகரணங்களை மட்டக்களப்பு நலிவுற்றோர் அபிவிருத்திச் சங்கம் ஐக்கிய இராச்சியம் மற்றும் வடக்கு கிழக்கு மாகாணங்கள் புற்றுநோய் உதவி சங்கம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நேற்று கொரோனாத் தொற்றிலிருந்து மக்களையும் வைத்திய துறை சார்ந்த சுகாதார சேவையாளர்களை பாதுகாக்கும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

நாவற்காடு, கரடியனாறு, வாழைச்சேனை, களுவாஞ்சிகுடி ஆகிய கொரோனா சிகிச்சை நிலையங்களுக்காக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து பணிப்பாளரிடம் வழங்கப்பட்டது.

அத்துடன் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை நிலையத்திற்காக ஒரு தொகுதி கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் போதனா வைத்தியசாலை பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது மொத்தமாக சுமார் 12 லட்சத்து எண்பதாயிரம் ரூபா பெறுமதியான கொரோனா பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்பட்டன என வட்ஸ் அமைப்பினர் தெரிவித்தனர்.

இவ் இருவேறு நிகழ்வுகளில் மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன், போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் கலாரஞ்சனி கணேசலிங்கம், வட்ஸ் அமைப்பின் மட்டக்களப்பு கிளை தலைவர் முத்துலிங்கம், பொருளாளர் தணிகாசலம், வைத்தியர் மயூரதன் மற்றும் கணக்காளர்கள், வைத்தியர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் தொடர்

# தென்னாபிரிக்காவை முதல் முறையாக வீழ்த்தி அயர்லாந்து சாதனை



ஒரு நாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்காவை அயர்லாந்து அணி முதன் முறையாக வென்றுள்ளது.

அயர்லாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி, தலா 3 ஒருநாள் மற்றும் ரி - 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடிவருகிறது. முதலாவது போட்டி மழை காரணமாக இடையில் கைவிடப் பட்ட நிலையில் தலைநகர் டப்ளினில் நேற்று நடைபெற்ற போட்டியில் அயர்லாந்து அணி 43 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னா பிரிக்க அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக் கப்பட்ட அயர்லாந்து அணி, கப்டன் அன்ட்ரு பல்பர்னியின் 102 ஓட்டங்களின் உதவியோடு 50 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 290 ஓட்டங்களைச் சேர்த்தது. ஹரி டெக்டொர் 79, ஜோர்ஜ் டொக்ரெல் 45 ஓட்டங்களை எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் பெலுக்வாயோ 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி னார்.

அடுத்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, 48.3 ஓவர்களில் 247 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 43 ஓட்டங் களால் தோல்வியடைந்தது. இதன் மூலம் முதன் முறையாக தென்னாபிரிக்காவுக்கு எதிராக அயர்லாந்து கிரிக்கெட் அணி தனது முதல் வெற் றியைப் பதிவு செய்தது. அயர்லாந்தின் மார்க் அடய்ர், ஜோஸ் லிட்டில், அன்டி மக்பிரைன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தி னர். போட்டியின் நாயகனாக அயர்லாந்து அணி யின் தலைவர் அன்ட்ரு பல்பர்னி தெரிவா னார்.இந்த வெற்றியின் மூலம் தென்னாபிரிக்கா வுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரில் 1 - 0 என்று அயர்லாந்து முன்னிலை பெற்றிருக்கிறது. இந்த இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டி நாளை மறுதி னம் நடைபெறவுள்ளது.

# ஒலிம்பிக் போட்டியிலிருந்து பெடரர் விலகினார்!




காயம் காரணமாக ஒலிம் பிக் போட்டியிலிருந்து வில குகிறேன் என உலகின் முன்னணி டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர் அறிவித் துள்ளார்.

20 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள சுவிட்ஸர்லாந்தைச் சேர்ந்த ரோஜர் பெடரர் சமீபத்தில் முடிவடைந்த விம்பிள்டன் டென்னிஸ் தொடரில், காலி றுதி ஆட்டத்தில் தோல்விய டைந்திருந்தார். ஏற்கனவே, முழங்கால் உபாதையால் சிகிச்சைபெற்று ஓய்விலிருந்த பெடரருக்கு விம்பிள்டன் தொடரின் கடுமையான ஆட்டங்கள் மீண்டும் சிக்கலை ஏற்படுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

முழங்கால் காயம் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டியி லிருந்து விலகுகிறேன் என டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், சுவிட்ஸர் லாந்து நாட்டுக்காக ஒலிம்பிக்கில் விளையாடாமல் போவது வருத்த மளிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒலிம்பிக்கில் பங்கேற்கும் சக நாட்டு வீரர்களுக்கு தனது வாழ்த்துகளையும் அவர் தெரிவித்துள்ளார்.




# ரி - 20 போட்டிகளில் 14,000 ஓட்டங்கள்

# கிறிஸ் கெயில் மிகப் பெரிய சாதனை!

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் அதிரடி வீரரான கிறிஸ் கெயில் ரி - 20 போட்டிகளில் 14,000 ஓட்டங்களை அடித்த முதல் வீரர் என்ற சாதனையைப் படைத்துள்ளார்.

சென்ட் லூசியாவில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது ரி - 20 போட்டியில் 67 ஓட்டங்களை எடுத்து அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்றார் கெயில். இந்த ஓட்டங்களோடு 14,038 ஓட்டங்களை ரி - 20 போட்டிகளில் பெற்றிருக்கிறார் கெயில். 41 வயதுடைய கிறிஸ் கெயில், 431 ரி - 20 போட்டிகளில் விளையாடி 22 சதங்களையும் 87 அரைச் சதங்களையும் விளாசியிருக்கிறார்.

இவருக்கு அடுத்தடுத்த இடங்களில் இரண்டாவதாக சக நாட்டு வீரர் பொலார்ட் 10,836 ஓட்டங் களுடனும், மூன்றாமிடத்தில் பாகிஸ்தானின் சொய்ப் மலிக் 10,741 ஓட்டங்களுடனும், நான்காவ தாக ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னர் 10,017, 5 ஆம் இடத்தில் இந்தியாவின் விராட் கோலி 9,922 ஓட்டங்களுடனும் இருக்கின்றனர்.




# ஐந்து தேசிய விளையாட்டுச் சங்கங்களின் பதிவுகள் இலங்கையில் தற்காலிகமாக இரத்து

இலங்கையின் ஐந்து தேசிய விளையாட்டுச் சங்கங்களின் பதிவுகளை இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு தற்காலிகமாக ரத்துச் செய்து விசேட வர்த்தமானி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனம், இலங்கை ஜூடோ சங்கம், இலங்கை ஸ்கிரபல் (Scrabble) சம்மேளனம், இலங்கை அலைச்சறுக்கு (Surfing) சம்மேளனம் மற்றும் இலங்கை ஜியு - ஜிட்சு (Jiu - jitsu) தற்காப்புக்கலைச் சம்மேளனம் ஆகியவற்றின் பதிவுகளே ரத்தாகியுள்ளன.

விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளராக இம்மாதம் முதலாம் திகதிமுதல் நியமிக்கப்பட்டுள்ள அமல் எதிரி சூரிய, இந்தச் சம்மேளனங்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் பொறுப்புவாய்ந்த அதிகாரியாக செயற்படுவார் எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.




#WTC23 - FIXTURES

| Member | Home | | | Away | | |
|---|---|---|---|---|---|---|
| AUS | ENG | SA | WI | IND | PAK | SL |
| BAN | PAK | IND | SL | SA | NZ | WI |
| ENG | IND | SA | NZ | PAK | WI | AUS |
| IND | SL | NZ | AUS | BAN | ENG | SA |
| NZ | SA | BAN | SL | ENG | PAK | IND |
| PAK | AUS | ENG | NZ | SL | BAN | WI |
| SA | IND | WI | BAN | AUS | ENG | NZ |
| SL | WI | AUS | PAK | BAN | NZ | IND |
| WI | PAK | BAN | ENG | AUS | SA | SL |

# டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடருக்கான அட்டவணை வெளியானது புள்ளிகள் வழங்கப்படுவதிலும் மாற்றங்கள்

டெஸ்ட் போட்டிகளை விளையாடும் நாடுகளுக்கு இடை யிலான உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரை சர்வதேசக் கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) 2019 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தி யது. அதன்படி டெஸ்ட் போட்டிகளுக்கு வழங்கப்பட்ட புள்ளிகளின் அடிப்படையில் தொடரின் முதலாவது இறுதிப் போட்டியில் விளையாட இந்திய - நியூசிலாந்து அணிகள் தகுதி பெற்றன. இங்கிலாந்தின் சவுத்தாம்டன் நகரில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் நியூசிலாந்து வென்று சம்பியனானது.

அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டி 2023 இல் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட நிலையில், அதற்கான புள்ளிகளைப் பெறுவதற்கு 9 நாடுகளுக்கான போட்டி அட்டவணையை ஐ.சி.சி. வெளியிட்டுள்ளது. இந்தப் போட்டிகளில் புள்ளிகள் பட்டியலில் முதல் இரண்டு இடங் களையும் பிடிக்கும் அணிகள் 2023 இல் நடைபெறவிருக் கும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்குத் தகுதி பெறும்.

இதே நேரத்தில், 2021 - 23 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் தொடரில் போட்டிகளுக்கான புள்ளிகளை வழங்குவதில் மாற்றத்தினையும் ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதுவரையில், தொடர்களுக்கு வழங்கப்படும் புள்ளிகள் போட்டிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப பிரிக்கப்பட்டு வந்தன. ஆனால், புதிய முறைப்படி ஒவ்வொரு டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கும் ஒரே மாதிரியான புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. ஒரு டெஸ்டில் வெற்றி பெறும் அணிக்கு 12 புள்ளிகளும் சம நிலையில் முடிந்தால் 6 புள்ளிகளும், எந்தவொரு அணிக் கும் வெற்றிதோல்வியற்ற முடிவு பெறப்பட்டால் 4 புள்ளிக ளும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எளிமை யான நடைமுறைக்காக புள்ளிகள் வழங்குவதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.சி. குறிப்பிட்டுள்ளது.

# சீன கடலட்டை பண்ணையை அகற்றாவிட்டால் நாம் சட்டவிரோத பண்ணையை அமைப்போம்



## அரசுக்கு சிவாஜிலிங்கம் எச்சரிக்கை

கிளிநொச்சி பூநகரிப் பகுதியிலுள்ள சீனாவின் கடலட்டைப் பண்ணையை அரசாங்கம் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால், வடபகுதி மீனவர்களுடன் இணைந்து, சட்டவிரோதமான கடலட்டைப் பண்ணைகளை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என முன்னாள் வட.மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் எச்சரிக்கை விடுத்தார்.

யாழில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

பூநகரி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சீனாவின் கடலட்டைப் பண்ணை இன்னும் அகற்றப்படவில்லை. ஆகவே இன்றிலிருந்து இன்னும் 2 வாரங்களுக்குள் அகற்றுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கத் தவறினால், நாங்களும் கடற்றொழிலாளர்களின் உதவியுடன் சட்டவிரோதமான பண்ணைகளை நிறுவுவோம்.

அதன்பின்னர் வரும் விளைவுகளைச் சந்திக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். மேலும் சீனா இதனூடாக கடலை பிடிப்பதற்கு முயற்சி செய்கிறது என்பதை இந்தியா உள்ளிட்ட நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கின் கங்கையிலுள்ள குப்பைகளை அகற்றும் பணிகளில் கடற்படையினர்






கின் கங்கை அகலிய மற்றும் தொடங்கொட பாலங்களின் கீழ் நீர் வழிப்பாதையை தடை செய்யும் வகையில் தேங்கியுள்ள குப்பை கூளங்கள் கடற்படை வீரர்களால் அகற்றப்பட்டது.

கங்கையில் சாதாரணமாக பாயும் நீரால் காவிச் செல்லப்படும் குப்பை கூளங்கள் இந்த பாலங்களின் கீழ் தேக்கம் அடைகின்றன. இதனால் கின் கங்கையின் நீரோட்டம் தடைப்பட்டு அது சுற்றியுள்ள தாழ்நிலப் பகுதிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட வழி வகுக்கின்றது.

எனவே, உடனடி நடவடிக்கைகளை ஆரம்பித்த தெற்கு கடற்படை கட்டளையகத்தின் சுழியோடி குழுக்கள், பாலங்களின் அடியில் தேங்கிய முற்றுகைகளை அகற்றியது.

வக்வெல்ல, அகலிய மற்றும் தொடங்கொடவில் அமைந்துள்ள சிறு பாலங்களுக்கு அடியில் சிக்கியுள்ள குப்பைக் கூளங்கள் மற்றும் ஏனைய பொருள்கள் என்பனவற்றை அகற்றி நீரோட்டத்தை இயல்பு நிலைக்கு கொண்டு வந்து கடலில் சங்கமமாக வழிவகுத்தனர்.





# ஹெரோயினுடன் குடு நோனி கைது

ஒரு தொகை ஹெரோயினுடன் குடு நோனி என அழைக்கப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொம்மை ஒன்றினுள் மறைத்து வைத்து குறித்த ஹெரோயினை அநுராதபுரத்திற்கு அனுப்ப முற்பட்ட போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதனையடுத்து கடுவலை பகுதியில் உள்ள அவரது வீட்டைச் சோதனையிட்டபோது அங்கிருந்த மேலும் 56 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜப்பானிடம் இருந்து இலங்கைக்கு 14 லட்சம் கொரோனாத் தடுப்பூசிகள்

கொழும்பு, ஜூலை 14

ஜப்பானில் உற்பத்தி செய்யப்படும் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் 14 லட்சம் டோஸ்களை இலங்கைக்கு பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஜப்பான் தூதரகம் இதனைத் தெரிவித்துள்ளது.

கொவெக்ஸ் திட்டத்தின் கீழ் இந்த தடுப்பூசி டோஸ்கள் இலங்கைக்கு பெற்றுக் கொடுக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சாதாரணக் குடும்ப மாணவர்களுக்கு இலவசக் கல்வி எட்டாக்கனி ஆகலாம்

## இலங்கை ஆசிரியர் சங்க ஹற்றன் கிளை வருத்தம்

எதிர்காலத்தில் இந்த இலவசக் கல்வி, சாதாரண மாணவனுக்கு எட்டாக்கனியாகக் கூட மாறலாம் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஹற்றன் கிளை பொறுப்பாளர் ரூபன் தெரிவித்துள்ளார்.

ஹற்றனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த ஊடகவியலாளர் சந்திப்பில் ரூபன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

இலவசக் கல்வி தற்போது வேறு விதமாக நகர்ந்து கொண்டு இருக்கின்றது.

அத்துடன் இலவசக் கல்வியை தனியார் மற்றும் இராணுவமயப்படுத்துவதற்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது.

இதேவேளை பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட தொழிற்சங்கத் தலைவர்கள், உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்' - என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# யாழ்ப்பாணத்துக்கு நன்னீர்த் திட்டம் டக்ளஸ் தேவானந்தா ஆலோசனை

இரணைமடு, கல்மடு, விசுவமடு, உடையார்கட்டு போன்ற குளங்களில் இருந்து வழிந்தோடி விரயமாகின்ற நீரைப் பயன்படுத்தி, யாழ்.மாவட்டத்துக்கான நன்னீரை பெற்றுக்கொள்ளும் திட்டத்தை செயற்படுத்துவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துரையாடியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் இதுதொடர்பான கலந்துரையாடல் நேற்று(செவ்வாய்க்கிழமை) நடைபெற்றது.

யாழ்.குடாநாட்டுக்கு நன்னீரை கொண்டு செல்லும் திட்டம் தொடர்பாக 1962 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஆறுமுகம் திட்டம் பிரஸ்தாபிக்கப்பட்ட போதிலும், ஆனையிறவு கடல் நீரேரியில் பருவகால மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவோரின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இந்தத் திட்டத்தில் மாற்றங்களை ஏற்படுத்தி ஆனையிறவு கடல் நீரேரியில் 23 வீதமான பகுதியை மறித்து அணை அமைத்து, திட்டத்தினை முன்னெடுப்பது தொடர்பாக தற்போதைய அரசாங்கத்தால் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது.



இந்நிலையில், பிரதேச மக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு, புதிய திட்டம் தொடர்பாகத் தெளிவுபடுத்தி, கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, நெதர்லாந்து அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் மறுசீரமைக்கப்பட்ட திட்டம் தொடர்பாக கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த.இராஜகோபுவால் தெளிவுபடுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரத்தினபுரி தோட்டத்தில் கொரோனாக் கொத்தணி

இரத்தினபுரி, ஜூலை 14

இரத்தினபுரி மாவட்டத்தில் பெருந்தோட்ட நெடுங்குடியிருப்புக்கள் அமைந்துள்ள பிரதேசம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொவிட் கொத்தணி ஒன்று இனங்காணப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மடபத்தர பிரிவின் பெருந்தோட்ட நெடுங்குடியிருப்பு ஒன்றில் குறித்த தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எழுமாற்றாக 350 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கடந்த 11 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை இந்த முடிவுகள் கிடைக்கப் பெற்றிருந்தன.

அயகம சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் சிங்ஹலகொட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சமன் குமார இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.07.2021இல் வெளியிடப்பெற்றது.